ஹரிதாஸ ஸாகித்யத்தைப் பற்றிய
1000 கேள்வி + பதில்கள்
(Objective Type Q&A)

தயாரித்து வெளியிட்டவர்:

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஹரிதாஸ ஸாகித்யத்தைப் பற்றிய 1000 கேள்வி + பதில்கள்

(Objective Type Q&A)

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால், ஸ்ரீவேணுகோபால விட்டல தாஸரின் ஆராதனை நாளான, வைசாக சுத்த த்விதியை, ஏப்ரல் 22, 2023 அன்று இந்தப் புத்தகம் பகவந்தனின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்புக்கு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு பொருளுதவி புரிந்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றிகள்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

முன்னுரை

ஹரே ஸ்ரீநிவாஸா. குரோ ராகவேந்திரா.

ஹரிதாஸ ஸாகித்யம் என்பது ஒரு பெருங்கடல். அதில் ஆயிரக்கணக்கான தேவர நாமாக்கள், சுளாதிகள், உகாபோகங்கள், தீர்க்க கிருதிகள் என இருக்கின்றன. இந்த அனைத்திலும் ஸ்ரீமத்வ மதத்தின் தத்வமான, தத்வவாதமே விளக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். பேசுமொழியான கன்னட பத்யங்களின் மூலம், தத்வத்தை புரிந்து கொள்ள ஹரிதாஸ ஸாகித்யம் உதவுகிறது.

இத்தகைய ஹரிதாஸ ஸாகித்யத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு அல்லது நாம் சரியாக தெரிந்து கொண்டிருக்கிறோமா என்று அறிவதற்கு, அவற்றிலிருந்து 1000 கேள்வி பதில்கள் (objective type question answers) இந்த புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. ஹரிகதாம்ருதஸாரம், தத்வ ஸுவ்வாலி, மத்வ நாமா, லட்சுமி ஷோபானெ, கேசவ நாமாக்கள் என பல கிருதிகளிலிருந்தும், ஹரிதாஸர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் ஸாதனை போதனைகள் என பல்வேறு தலைப்புகளிலிருந்து கேள்விகள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஹரிதாஸ ஸாகித்யத்தில் ஈடுபாடு கொண்டிருப்பவர்கள் அனைவரும் இந்த தொகுப்பினை படித்து, கேள்விகளுக்கு சரியான பதில்கள் தெரிகின்றனவா என்று சரிபார்த்துக் கொள்ளலாம். இதனை, ஒரு முறை மட்டுமின்றி, அடிக்கடி வெவ்வேறு சமயங்களில், படித்துப் பார்த்து, விஷயங்களை திரும்ப நினைவுக்குக் கொண்டு வரலாம். இவற்றில் ஏதேனும் கேள்விக்கு தவறான பதில் கொடுக்கபட்டிருந்தால், தயவு செய்து அதனை தெரிவிக்கவும்.

குர்வந்தர்கத பாரதிரமண முக்யபிராணாந்தர்கத ஸ்ரீஜகன்னாத கேசவ ப்ரியதாம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
16-03-2023 **8904458276**

ஶ்ரீகுருப்யோ நம:

ஹரிதாஸ ஸாகித்யத்தைப் பற்றிய
1000 கேள்வி + பதில்கள்

1. பாகேபல்லி சேஷதாஸரின் இடம்?
அ. சிக்கபள்ளாபுர ஆ. தேவராயனதுர்கா இ. தொட்டபள்ளாபுர
ஈ. மானவி

2. இவற்றில் எது ஶ்ரீஹரியின் ஸாதாரண விபூதி ரூபங்கள்?
அ. அவதாரங்கள் ஆ. பிராமண & கிருஹஸ்தர்களில் இ. யதி, தேவதைகளில் ஈ. முக்தி யோக்ய மனிதர்களில்

3. ஶ்ரீஹரி ஏன் ‘பராவரேஷ’ ?
அ. பக்தர்களின் நண்பன் ஆ. நற்சேதனர்களைக் காப்பவன் இ. புதிதாக பொலிவுடன் இருப்பவன் ஈ. யாராலும் அறியப்படாதவன்

4. பூஜைப் பொருட்களில் இருக்கும் ஶ்ரீஹரியின் ரூபங்கள்?
அ. 52241 ஆ. 52144 இ. 52214 ஈ. 52114

5. 27 நட்சத்திரங்கள் ஒரு ஆண்டு முழுக்க சுற்றி வரும் காலம்?
அ. வத்ஸர ஆ. ஸம்வத்ஸர இ. இடாவத்ஸர ஈ. பரிவத்ஸர

6. ஶ்ரீமதாசார்யரின் அவதார விஷயம் எந்த சூக்தத்தில் சொல்லப்பட்டுள்ளது?
அ. புருஷ ஆ. வாயு இ. பளித்தா ஈ. மன்யு

7. த்ரேதாயுகத்தில் ஶ்ரீஹரியை எப்படி வணங்கவேண்டும்?
அ. த்யானம் ஆ. யக்ஞ யாகம். இ. கர்மங்களை செய்து ஈ. பாடியவாறு

8. ஶ்ரீஹரி ஏன் ஸார்வக?
அ. சுதந்திரமானவன் ஆ. நற்குணங்கள் நிரம்பியவன்
இ. அனைவருக்கும் தலைவன் ஈ. எங்கும் இருப்பவன்

9. உண்பது - எந்த கோஷத்தின் வேலை?
அ. அன்னமய ஆ. மனோமய இ. விக்ஞானமய ஈ. ஆனந்தமய

10. 400ல் தைத்யர்களுக்கு எவ்வளவு ஸ்வதந்த்ரத்தை ஸ்ரீஹரி கொடுத்தார்?
அ. 10 ஆ. 45 இ. 52.5 ஈ. 47.5

11. எந்த ஸ்ரீஹரி ரூபத்தின் மனைவி மாயாதேவி?
அ. அனிருத்த ஆ. பிரத்யும்ன இ. சங்கர்ஷண ஈ. வாஸுதேவ

12. ஸ்ரீஜகன்னாததாஸர் யாரிடம் அங்கிதம் பெற்றார்?
அ. ஸ்ரீவிஜயதாஸர் ஆ. ஸ்ரீகோபாலதாஸர் இ. ஸ்ரீவரதேந்திரர்
ஈ. இவர்களிடம் இல்லை

13. இவற்றில் எது ஸ்ரீஹரியின் நைஜ விபூதி ரூபங்கள்?
அ. ஸாலிகிராமத்தில் ஆ. மலைகளில் இ. ஸ்வயம்வ்யக்த ஸ்தளங்களில் ஈ. முக்தி யோக்ய மனிதர்களில்

14. பழங்களில் இருக்கும் ஸ்ரீஹரியின் ரூபங்கள் எவ்வளவு?
அ. 2528 ஆ. 2258 இ. 2285 ஈ. 2825

15. பணீந்த்ர - யார்?
அ. பிரம்மா ஆ. கருட இ. சேஷ ஈ. வாயு

16. குளிது பாடலு நிலுவ - என்று யாரை ஸ்ரீஜகன்னாததாஸர் குறிப்பிடுகிறார்?
அ. நாரத ஆ. புண்டலீக இ. பீஷ்ம ஈ. பிரகலாத

17. லட்சுமி ஷோபானெயில் எவ்வளவு பத்யங்கள் உள்ளன?
அ. 100 ஆ. 112 இ. 125 ஈ. 150

18. ஸ்ரீஹரியின் குணங்களில் பேதம் உள்ளது
அ. ஆம் ஆ. இல்லை இ. இருக்கலாம் ஈ. தெரியவில்லை

19. தத்வசுவ்வாலியில் வணங்கப்பட்டுள்ள தேவதை யார்?
அ. அக்னி ஆ. கங்கை இ. கணபதி ஈ. இவர் அனைவரும்

20. த்ரயம்பக - யார்?
அ. கருட ஆ. சேஷ இ. ருத்ர ஈ. வாயு

21. மங்களனுக்கு இன்னொரு பெயர்?
அ. அங்காரக ஆ. குஜ இ. பௌம ஈ. இவை அனைத்தும்

22. பிரம்மா, சரஸ்வதியர்கள் முக்தி அடைவதற்கு சில சாதனைகளை செய்யவேண்டும்.
அ. சரி ஆ. தவறு

23. அத்ரி முனிவர் & அனுஸூயையின் வாரிசு யார்?
அ. தத்த ஆ. துர்வாஸ இ. சந்திர ஈ. இவர்கள் அனைவரும்

24. எந்த பஞ்சபூதத்திற்கு கணபதி அபிமானி தேவதை?
அ. வாயு ஆ. நீர் இ. பூமி ஈ. ஆகாயம்

25. சந்திரன் பிறந்தது எங்கே?
அ. கைலாயத்தில் ஆ. மேரு பர்வதத்தில் இ. பாற்கடலில் ஈ. பிரம்ம லோகத்தில்

26. மத்வ நாமாவில் எவ்வளவு ஸ்லோகங்கள்?
அ. 27 ஆ. 29 இ. 32 ஈ. 34

27. இவற்றில் பஞ்சாக்னியில் சேர்ந்தது எது?
அ. மழை ஆ. புருஷ இ. ஸ்த்ரீ ஈ. இவை அனைத்தும்

28. தத்வசுவ்வாலியில் விளக்கப்பட்ட விஷயம் என்ன?
அ. த்வைதத்தின் சிறப்பு ஆ. அத்வைத கண்டன இ. ஹரி ஸர்வோத்தமத்வ ஈ. இவை அனைத்தும்

29. ஸ்ரீஹரி ஏன் குணபூர்ண?
அ. சுதந்திரமானவன் ஆ. நற்குணங்கள் நிரம்பியவன்
இ. அனைவருக்கும் தலைவன் ஈ. எங்கும் இருப்பவன்

30. நம் உடலில் அபானரூபி வாயு எங்குள்ளார்?
அ. கண், காது, மூக்குகளில் ஆ. கழிவு உறுப்புகள் இ. 72,000 நாடிகள் ஈ. சுஷும்னா நாடி

31. வசன சாகித்யகாரர்களையும் வாக்யேயகாரர்கள் எனலாம்.
அ. சரி ஆ. தவறு

32. ஷக்ராரிகளு - யார்?
அ. ரிஷிகள் ஆ. தேவதைகள் இ. தைத்யர்கள் ஈ. மனிதர்கள்

33. 365 நாட்களைக் கொண்டது ஒரு :
அ. வத்ஸர ஆ. ஸம்வத்ஸர இ. அணுவத்ஸர ஈ. பரிவத்ஸர

34. பலவிது பாள்துதக்கே - இயற்றியவர் யார்?
அ. ஸ்ரீவிஜயதாஸர் ஆ. ஸ்ரீஜகன்னாததாஸர் இ. ஸ்ரீகோபாலதாஸர்
ஈ. ஸ்ரீமோகனதாஸர்

35. ஜஜி ஸ்வாமிகளின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா
இ. வாஸுதேவவிட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

36. ஸ்ரீஹரியின் உடல் உறுப்புகளில் பேதம் உள்ளது
அ. ஆம் ஆ. இல்லை இ. இருக்கலாம் ஈ. தெரியவில்லை

37. ஸ்ரீபுரந்தரதாஸருக்குப் பின், ஹரிதாஸ பரம்பரையில் சுமார் எவ்வளவு ஆண்டுகள் இடைவெளி இருந்தது?
அ. 100 ஆ. 150 இ. 200 ஈ. 250

38. 286. : நம் உடலில் ஸமானரூபி வாயு எங்குள்ளார்?
அ. கழிவு உறுப்புகள் ஆ. 72,000 நாடிகள் இ. நாபி பிரதேசத்தில்
ஈ. சுஷும்னா நாடி

39. மாறனின் எதிரி யார்?
அ. சூரியன் ஆ. சந்திரன். இ. கணபதி ஈ. யமன்

40. கன்றின் கொம்பில் மறைந்திருந்து ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்ல வந்த அசுரன் யார்?
அ. ஷகடாஸுர ஆ. த்ருணவக்த்ர இ. வத்ஸாஸுர ஈ. குவலபீட

41. க்ரீஷ்மருதுவில் ஸ்ரீஹரியின் எந்த ரூபத்தை நினைக்க வேண்டும்?
அ. ஹீங்கார ஆ. ப்ரஸ்தாவ இ. உத்கீத ஈ. ப்ரதிஹார

42. உண்டதில் மகிழ்வது - எந்த கோஷத்தின் வேலை?
அ. அன்னமய ஆ. மனோமய இ. விக்ஞானமய ஈ. ஆனந்தமய

43. அசுரர் / தைத்யர்களுக்கு கெட்ட பலன்களைக் கொடுப்பவர் ஸ்ரீஹரியே.
அ. சரி ஆ. தவறு

44. ஸூரகதம்ப வந்த்ய என்றால்?
அ. தேவர்களால் வணங்கப்படுபவன் ஆ. யானைத் தலை கொண்டவன்
இ. பெரிய வயிறு கொண்டவன் ஈ. பாம்பை இடுப்பில் கட்டியவன்

45. ஸூரப்ரிய என்றால் என்ன?
அ. தோஷங்கள் அற்றவர் ஆ. நற்குணங்கள் நிறைந்தவர்
இ. தேவர்களால் விரும்பப்படுபவர் ஈ. இவை அனைத்தும்

46. வாயுதேவர் இப்படியும் அழைக்கப்படுகிறார்?
அ. ஜகத்ராண ஆ. ஸூத்ராண இ. ஸத்தாம ஈ. அனைத்தும்

47. பழங்களில் இருக்கும் சுவைக்கு என்ன பெயர்?
அ. விஷத ஆ. ஸ்திர இ. தீக்ஷ்ண ஈ. நிரஹர

48. ஹரிகதாம்ருதசார & தத்வசுவ்வாலியின் வித்தியாசம் என்ன?
அ. நுடி ஆ. விளக்கும் வழிமுறை இ. படிப்பவர்கள் ஈ. இவை அனைத்தும்

49. ஞான வைராக்ய ஸம்பன்னம்... ___ குரும் வந்தே...
அ. புரந்தர ஆ. விஜய இ. ஜகன்னாத ஈ. கோபால

50. பிள்ளரி கீதெ இயற்றியவர்?
அ. ஸ்ரீபுரந்தரதாஸர் ஆ. ஸ்ரீவிஜயதாஸர் இ. ஸ்ரீகனகதாஸர்
ஈ. ஸ்ரீகோபாலதாஸர்

51. ஸ்ரீகோரேபாள ஹனுமந்த ராயர் யாரிடம் அங்கிதம் பெற்றார்?
அ. குரு விட்டலா ஆ. குரு ஜகன்னாத விட்டலா இ. குரு கோவிந்த விட்டலா ஈ. தந்தெகோவிந்த விட்டலா

52. பேய என்றால் எவ்வித உணவு?
அ. கடிப்பது ஆ. முழுங்குவது இ. நக்கி தின்பது ஈ. குடிப்பது

53. எதை சொல்ல முடியாதவர்களுக்காக ஸ்ரீஸ்ரீபாதராஜர் மத்வ நாமாவை இயற்றினார்?
அ. அணுபாஷ்ய ஆ. மத்வவிஜய இ. வாயுஸ்துதி ஈ. அணுமத்வ விஜய

54. ஹரிதாஸகுலதிலக - என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீஉரகாத்ரிவாஸ விட்டலதாஸர் இ. ஸ்ரீபாகேபள்ளி சேஷதாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

55. ஷண்முகனுக்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?
அ. யானைத் தலை ஆ. பாம்புத் தலை இ. ஆறு தலைகள் ஈ. இவை அனைத்தும்

56. நம் உடலில் வ்யானரூபி வாயு எங்குள்ளார்?
அ. கண், காது, மூக்குகளில் ஆ. கழிவு உறுப்புகள் இ. 72,000 நாடிகள்
ஈ. சுஷும்னா நாடி

57. ஸ்ரீஸுமதீந்திர தீர்த்தர், யசோதை, தேவகி, கௌஸல்யா என்று யாரை புகழ்ந்தார்?
அ. ஹெளவனகட்டெ கிரியம்மா ஆ. ஹரபனஹள்ளி பீமவ்வா
இ. இருவரையும். ஈ. யாரையும் இல்லை

58. ஹரிகதாம்ருதஸாரம் எந்த நுடியில் உள்ளது?
அ. ஷட்பதி ஆ. பாமினி ஷட்பதி இ. த்ரிபதி ஈ. சதுஷ்பதி

59. நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே __ யோகினே
அ. விஜய ஆ. ஸ்ரீபாத இ. ஜகன்னாத ஈ. வ்யாஸ

60. ஸ்ரீகோபாலதாஸர் யாருடைய அம்சமாக கருதப்படுகிறார்?
அ. நாரதர். ஆ. யமன். இ. ப்ருகு ஈ. கணேஷ

61. குருகிருபா கிரந்தமாலா வழியாக புத்தகங்களை அச்சிட்டு வெளியிட்டவர் யார்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸர்
இ. ஸ்ரீதொட்டபள்ளாபுர தாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

62. ஸ்ரீஜகன்னாததாஸருக்கு 40 ஆண்டுகள் ஆயுள்தானம் கொடுத்தவர் யார்?
அ. ஸ்ரீமோகனதாஸர் ஆ. ஸ்ரீவிஜயதாஸர் இ. ஸ்ரீகோபாலதாஸர்
ஈ. ஸ்ரீவ்யாஸவிட்டலர்

63. உலகில் அபானரூபி வாயு எங்குள்ளார்?
அ. சூரியன் ஆ. கழிவுகளை அகற்றும் பணியில் இ. காற்றில்
ஈ. உடலுக்கு வெளியே தேஜஸ்ஸில்

64. ஸ்ரீவிஜயதாஸரின் 'சல ப்ரதிமை' என்று கருதப்படுபவர் யார்?
அ. ஸ்ரீமோகனதாஸர் ஆ. ஸ்ரீவேணுகோபால விட்டலதாஸர்
இ. ஸ்ரீகோபாலதாஸர் ஈ. ஸ்ரீவ்யாஸவிட்டலர்

65. ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸரின் சொந்த ஊர்?
அ. தேவராயனதுர்கா ஆ. மைசூரு இ. தொட்டபள்ளாபுர ஈ. மாண்ட்யா

66. ஹரிதாஸர்களின் தெய்வீக அனுபவம் எப்படிப்பட்டது?
அ. சொந்த அனுபவம் ஆ. ஆத்ம அனுபவம் இ. அபரோக்ஷ அனுபவம்
ஈ. மேற்கூறிய அனைத்தும்

67. முதன்முதலில் கன்னடத்தில் தேவரநாமா எழுதியவர்?
அ. ஸ்ரீஸ்ரீபாதராஜர் ஆ. ஸ்ரீவ்யாஸராஜர் இ. ஸ்ரீநரஹரி தீர்த்தர்
ஈ. ஸ்ரீஜயதீர்த்தர்

68. மத்வ நாமாவில் வாயுதேவரைக் குறித்தான ஸ்லோகங்கள் எவ்வளவு?
அ. 7 ஆ. 4 இ. 8 ஈ. 10

69. பலவிது பாள்துதக்கெ __ நிலயன குணகள
அ. ராம ஆ. லட்சுமி இ. ஹரி ஈ. ஸிரி

70. 15/16ம் நூற்றாண்டில் ஹரிதாஸர்களின் தலைமையிடம்?
அ. ஹம்பி ஆ. மந்திராலயம் இ. ராய்ச்சூர் ஈ. திருப்பதி

71. ஹரிதாஸ ஸாகித்யம் எதனுடைய ஸாரம்?
அ. வேத உபநிஷத்கள் ஆ. த்வைத ஸித்தாந்தம் இ. இதிகாச புராணங்கள் ஈ. மேற்கூறிய அனைத்தும்

72. கலியுகத்தில் ஸ்ரீஹரியை எப்படி வணங்கவேண்டும்?
அ. த்யானம் ஆ. யக்ஞ யாகம். இ. கர்மங்களை செய்து ஈ. பாடியவாறு

73. முக்திக்காக ஹரிதாஸர்கள் எந்த வழியை பின்பற்றினர்?
அ. கர்ம மார்க்கம் ஆ. ஞான மார்க்கம் இ. யோக மார்க்கம் ஈ. பக்தி மார்க்கம்

74. இரண்டாம் கல்பத்தில் ருஜு கணஸ்தரின் பெயர்?
அ. பிரம்மா ஆ. ஸுதேஜ இ. கல்கி ஈ. லாதவ்ய

75. நவவித பக்தியில் எது சேர்ந்ததில்லை?
அ. ஸ்மரண ஆ. கீர்த்தன இ. குண ஈ. ஸக்ய

76. தண்ணீரில் இருக்கும் ஸ்ரீஹரியின் ரூபங்கள் எவ்வளவு?
அ. 42 ஆ. 22 இ. 24 ஈ. 44

77. தாஸகூடம் உருவான ஆண்டு?
அ. 1900 ஆ. 1910 இ. 1920 ஈ. 1930

78. ஸ்மரண பக்தி என்றால்?
அ. ஸ்ரீஹரியின் நற்குணங்களை கேட்டல் ஆ. ஸ்ரீஹரியின் நற்குணங்களைப் பற்றி பேசுதல் இ. ஸ்ரீஹரியின் நற்குணங்களை சிந்தித்தல் ஈ. ஸ்ரீஹரியின் நற்குணங்களைப் பற்றி பாடுதல்

79. ஸ்ரீலட்சுமி நாராயண முனி யாருடைய அம்சமாகக் கருதப்படுகிறார்?
அ. த்ருவ ஆ. விஷ்வாமித்ர இ. வசிஷ்ட ஈ. நாரத

80. யாருடைய தாஸத்வத்தைப் பார்த்து - TTD தாச சாகித்ய ப்ராஜெக்ட் துவக்கப்பட்டது?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸர் இ. ஸ்ரீதொட்டபள்ளாபுர தாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

81. ஹரிதாஸ ஸாகித்யத்தின் நோக்கம்?
அ. பக்தியை பரப்புதல் ஆ. த்வைதத்தை போதித்தல் இ. ஸ்ரீஹரியின் நற்குணங்களை விளக்குதல் ஈ. மேற்கூறிய அனைத்தும்

82. கிருதயுகத்தில் மோட்சத்திற்கு என்ன செய்யவேண்டும் என்று ஸ்ரீஸ்ரீபாதராஜர் கூறுகிறார்?
அ. தியானம் ஆ. யக்ஞும் இ. அர்ச்சனை ஈ. கீர்த்தனம்

83. கோபபிரகார சங்காஷம்... __ க்ய குரும் பஜே
அ. கோபால ஆ. பாகண்ணா இ. கனக ஈ. ஸ்ரீனிவாஸ

84. பஜனா பத்ததியில் என்னென்ன இருக்க வேண்டும்?
அ. மங்களாசரணம் ஆ. தேவ தாரதம்ய இ. ஹரிவாண ஸேவை ஈ. மேற்கூறிய அனைத்தும்

85. அங்கிதம் என்றால்?
அ. கையெழுத்து-பெயர் ஆ. பிம்பரூபி பரமாத்மனின் பெயர்
இ. புனைபெயர் ஈ. மேற்கூறிய அனைத்தும்

86. மத்வ நாமா பலஸ்ருதியில் எவ்வளவு ஸ்லோகங்கள் உள்ளன?
அ. 1 ஆ. 2 இ.3 ஈ. 4

87. ப்ருத்வி தேஜஸ் அபு வாயு ஆகாஷ - இவற்றின் பெயர் என்ன?
அ. பஞ்சபூத ஆ. பஞ்சதன்மாத்ர இ. பஞ்ச அக்னி ஈ. பஞ்சராத்ர

88. நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே.. ___ தே நம:
அ. புரந்தர ஆ. விஜய இ. ஜகன்னாத ஈ. கோபால

89. (பலவிது பாள்துதக்கெ) யாரிடம் சென்று நாம் உதவிகளை கேட்கக்கூடாது?
அ. தாழ்ந்தவர்கள் ஆ. யாரிடமும் இ. நல்லவர்கள் ஈ. எதுவுமில்லை

90. உலகில் உதானரூபி வாயு எங்குள்ளார்?
அ. சூரியன் ஆ. கழிவுகளை அகற்றும் பணியில் இ. காற்றில்
ஈ. உடலுக்கு வெளியே தேஜஸ்ஸில்

91. இவற்றில் எது ராக தாளத்திற்கு உட்பட்டது?
அ. கீர்த்தனை ஆ. உகாபோக இ. ஸுளாதி ஈ. மற்றவை

92. இபராமபுர அப்பாவரின் புண்ய தினம்?
அ. ஆஷாட சுத்த ப்ரதமை ஆ. பாத்ரபத சுத்த ப்ரதமை இ. ஸ்ராவண பகுள ப்ரதமை ஈ. ஸ்ராவண சுத்த ப்ரதமை

93. ஶ்ரீஜகன்னாததாஸரின் இயற்பெயர்?
அ. நரசிம்ம ஆ. ஜகன்னாத இ. ஶ்ரீனிவாஸ ஈ. கோபால

94. இவற்றில் எது கனகதாஸர் எழுதியதில்லை?
அ. நள சரித்ரெ ஆ. ராமதான்ய சரித்ரம் இ. ஹரிபக்திஸார ஈ. கஜேந்திர மோட்ச

95. ஸ்வாச - என்றால்?
அ. மூச்சை அடக்குவது ஆ. மூச்சு விடுவது இ. மூச்சு உள்ளிழுப்பது
ஈ. எதுவுமில்லை

96. ஶ்ரீமஹிபதி தாஸரின் சொந்த ஊர்?
அ. பாகலகோடெ ஆ. கர்ஜிகி இ. காகிண்டிகி ஈ. ராய்ச்சூர்

97. ருத்ரர் & இந்திரன் துர்-செயல்களை செய்ய வாய்ப்பு உண்டு.
அ. சரி ஆ. தவறு

98. ஶ்ரீமொதலகல்லு சேஷதாஸரின் புண்ய தினம்?
அ. சைத்ர சுத்த அஷ்டமி ஆ. வைசாக சுத்த அஷ்டமி இ. சைத்ர பகுள அஷ்டமி ஈ. வைசாக பகுள அஷ்டமி

99. ஶ்ரீவிஜயதாஸரின் தத்துப் பிள்ளை?
அ. ஶ்ரீமோகனதாஸர் ஆ ஶ்ரீகோபாலதாஸர் இ. ஶ்ரீவ்யாஸவிட்டலர்
ஈ. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸர்

100. ஶ்ரீமுத்துமோகனதாஸரின் சொந்த ஊர்?
அ. சிக்கபள்ளாபுர ஆ. ராய்ச்சூர் இ. தொட்டபள்ளாபுர ஈ. மானவி

101. ஶ்ரீப்ராணேஷ தாஸரின் சொந்த ஊர்?
அ. பாகல்கோடெ ஆ. கர்ஜிகி இ. காகிண்டிகி ஈ. லிங்கஸுகூர்

102. ஶ்ரீப்ரஸன்னவெங்கட தாஸரின் சொந்த ஊர்?
அ. பாகல்கோடெ ஆ. கர்ஜிகி இ. காகிண்டிகி ஈ. ராயச்சூர்

103. பாகெபல்லி சேஷதாஸரின் அங்கித குரு யார்?
அ. ஸ்ரீநிதி விட்டலர் ஆ. ஸ்ரீவர விட்டலர் இ. தந்தெ முத்து மோகன தாஸர் ஈ. முத்துமோகனதாஸர்

104. ஸ்ரீபுரந்தரதாஸர் பிறந்த இடம்?
அ. புரந்தரகட ஆ. ஹம்பி இ. விஜய நகரம் ஈ. பண்டரிபுரம்

105. ஸ்ரீகோபாலதாஸர் எந்த மந்திரத்தை உச்சரித்து ஸித்தி அடைந்தார்?
அ. காயத்ரி ஆ. நாராயண இ. கோண ஈ. நரஸிம்ம

106. உலகில் ஸமானரூபி வாயு எங்குள்ளார்?
அ. கழிவுகளை அகற்றும் பணியில் ஆ. காற்றில் இ. ஆகாயத்தில்
ஈ. சூரியனில்

107. ஸ்ரீஷ்யாமஸுந்தர தாஸரின் புண்ய தினம்?
அ. சைத்ர சுத்த நவமி ஆ. வைசாக சுத்த நவமி இ. சைத்ர பகுள நவமி
ஈ. வைசாக பகுள நவமி

108. ஸ்ரீதவிட்டலரின் சொந்த ஊர்?
அ. கர்ஜிகி ஆ. தேவராயனதுர்கா இ. தொட்டபள்ளாபுர ஈ. மானவி

109. ஸ்ரீவரவிட்டல தாஸர் யாரிடம் அங்கிதம் பெற்றார்?
அ. ஸ்ரீவிஜயதாஸர் ஆ. ஸ்ரீகோபாலதாஸர் இ. ஸ்ரீநிதி விட்டலர்
ஈ. ஸ்ரீஜகன்னாததாஸர்

110. ஸ்ரீதந்தெமுத்துமோகனதாசரின் சொந்த ஊர்?
அ. சிக்கபள்ளாபுர ஆ. தேவராயனதுர்கா இ. தொட்டபள்ளாபுர
ஈ. மானவி

111. (பலவிது பாள்துதக்கெ) யாரை வேண்டி நாம் வரங்களை கேட்கக்கூடாது?
அ. சிறிய கடவுளர்கள் ஆ. சிறிய தேவதைகள் இ. ஸ்ரீஹரியைத் தவிர யாரிடமும் ஈ. மேற்கூறிய அனைத்தும்

112. ஶ்ரீவைகுண்ட தாசரின் சமகாலத்தவர்?
அ. ஶ்ரீபுரந்தரதாஸர். ஆ. ஶ்ரீவிஜயதாஸர் இ. ஶ்ரீபிரஸன்னவெங்கட தாஸர் ஈ. ஶ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர்

113. பங்க நாமத திம்மண்ணா என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. ஶ்ரீமோகனதாஸர் ஆ. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸர்
இ. ஶ்ரீகோபால தாஸர் ஈ. ஶ்ரீவ்யாஸவிட்டலர்

114. பாகெபல்லி சேஷதாஸரின் புண்ணிய தினம்?
அ. கார்த்திக சுத்த தசமி ஆ. பாத்ரபத சுத்த சதுர்தசி இ. கார்த்திக பகுள சதுர்தசி ஈ. புஷ்ய பகுள அஷ்டமி

115. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸரின் புண்ய தினம்?
அ. கார்த்திக சுத்த தசமி ஆ. புஷ்ய அமாவாசை இ. வைசாக சுத்த த்ருதியை ஈ. புஷ்ய பகுள அஷ்டமி

116. ஶ்ரீவிஜயதாஸர் இவ்வாறும் அழைக்கப்பட்டார்.
அ. தாஸப்ப ஆ. கூஸுமக தாஸ. இ. ஸுளாதி தாஸ ஈ. மேற்கூறிய அனைத்தும்.

117. கல்லூர் சுப்பண்ணாசார்யர் என்பது யாருடைய இயற்பெயர்?
அ. ஶ்ரீமோகனதாஸர் ஆ. ஶ்ரீகோபாலதாஸர் இ. ஶ்ரீவ்யாஸவிட்டலர்
ஈ. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸர்

118. யுக்தியலி பாகண்ணா என்று அழைக்கப்படுபவர் யார்?
அ. ஶ்ரீமோகனதாஸர் ஆ. ஶ்ரீகோபாலதாஸர் இ. ஶ்ரீவ்யாஸவிட்டலர்
ஈ. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸர்

119. 217 நுடிகள் கொண்ட கோலு ஹாடு இயற்றியவர்?
அ. ஶ்ரீமோகனதாஸர் ஆ. ஶ்ரீகோபாலதாஸர் இ. ஶ்ரீவ்யாஸவிட்டலர்
ஈ. ஶ்ரீவேணுகோபால விட்டலதாஸர்

120. ஶ்ரீவிஜயதாஸர் எவ்வளவு பேருக்கு அங்கிதம் கொடுத்தார்?
அ. 25 ஆ. 50 இ. 75 ஈ. 100

121. மொதலகல்லு ஸ்ரீசேஷதாசர் தன் கனவில் யாரிடமிருந்து அங்கிதம் பெற்றார்?
அ. ஸ்ரீஜகன்னாததாஸர் ஆ. ஸ்ரீவிஜயதாஸர் இ. ஸ்ரீபுரந்தரதாஸர்
ஈ. ஸ்ரீகோபாலதாஸர்

122. கனகதாஸரின் இயற்பெயர்?
அ. ஸ்ரீனிவாஸ ஆ. திம்ம இ. மோகன ஈ. விஜய

123. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸரின் அங்கிதம் ?
அ.முத்துமோகன விட்டலா ஆ. தந்தெமுத்து மோகனவிட்டலா
இ. மோகன விட்டலா ஈ. விட்டலா

124. தொட்டபள்ளாபுர தாஸரின் அங்கிதம்?
அ.முத்துமோகன விட்டலா ஆ. தந்தெமுத்து மோகனவிட்டலா
இ. மோகன விட்டலா ஈ. விட்டலா

125. ஸ்ரீகோபாலதாஸரின் அங்கிதம்?
அ.ஸ்ரீவிஜயவிட்டலா ஆ. ஸ்ரீகோபாலவிட்டலா இ. ஸ்ரீஜகன்னாத விட்டலா ஈ. ஸ்ரீதவிட்டலா

126. பக்தியலி பாகண்ணா - யார்?
அ. ஸ்ரீமோகனதாஸர் ஆ. ஸ்ரீகோபாலதாஸர் இ. ஸ்ரீவ்யாஸவிட்டலர் இ. ஸ்ரீவேணுகோபால விட்டலதாஸர்

127. சீனப்பா' வின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. குரு கோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

128. ஸ்ரீபுரந்தரதாஸருக்கு எவ்வளவு மகன்கள் இருந்தனர்?
அ. 1 ஆ. 2 இ. 3 ஈ. 4

129. தாஸப்பா' வின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. குரு கோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

130. ரங்கப்பா ' வின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. குரு கோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

131. ஸ்ரீவ்யாஸ தத்வக்ஞரின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. வாஸுதேவ விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

132. ஹரிதாஸினி ஹரப்பனஹள்ளி பீமவ்வாவின் அங்கிதம்?
அ. பீமேஷ கிருஷ்ண ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. வாஸுதேவ விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

133. ஹரிதாஸினி ஹெளவனகட்டெ கிரியம்மாவின் அங்கிதம்?
அ. பீமேஷ கிருஷ்ண ஆ. ஹெளவனகட்டெ ரங்கா ஸ்ரீவரத கோபால விட்டலா இ. வாஸுதேவவிட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

134. கத்வால் ஸுப்பண்ண தாஸரின் அங்கிதம்?
அ. ஸ்ரீகோபாலவிட்டலா ஆ. ஸ்ரீவரதகோபாலவிட்டலா இ. கேஸவ விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

135. ஸ்ரீப்ரேம தாஸரின் அங்கிதம்?
அ. ஸ்ரீஜனார்த்தன விட்டலா ஆ. ஸ்ரீஅபினவ ஜனார்த்தன விட்டலா
இ. ஸ்ரீகுருகோபாலவிட்டலா ஈ. ஸ்ரீகேசவ விட்டலா

136. (பலவிது பாள்துதக்கெ) சிறியவர்களின் உதவியால் செய்யப்பட்ட வேலைகள் எதனை கொடுக்கும்?
அ. தவறான முடிவுகள் ஆ. குறைந்த முடிவுகள் இ. இரண்டும்
ஈ. இரண்டும் இல்லை

137. ஸ்ரீஜட்டி வெங்கடதாஸரின் அங்கிதம்?
அ. ஸ்ரீஜனார்த்தன விட்டலா ஆ. ஸ்ரீஅபினவ ஜனார்த்தன விட்டலா
இ. ஸ்ரீமாதவவிட்டலா ஈ. ஸ்ரீகேசவ விட்டலா

138. ஸ்ரீகுண்டோஜி நரசித்தி தாசரின் அங்கிதம்?
அ. ஸ்ரீஜனார்த்தன விட்டலா ஆ. ஸ்ரீகுருஸ்ரீஷ விட்டலா இ. ஸ்ரீமாதவ விட்டலா ஈ. ஸ்ரீகேசவ விட்டலா

139. ஶ்ரீகத்வால் தாசரின் அங்கிதம்?
அ. ஶ்ரீபதி விட்டலா ஆ. ஶ்ரீகுருஶ்ரீஷ விட்டலா இ. ஶ்ரீமாதவவிட்டலா
ஈ. ஶ்ரீகேசவ விட்டலா

140. த்ரேதாயுகத்தில் மோட்சத்திற்கு என்ன செய்யவேண்டும் என்று ஶ்ரீஶ்ரீபாதராஜர் கூறுகிறார்?
அ. தியானம் ஆ. யக்ஞும் இ. அர்ச்சனை ஈ. கீர்த்தனம்

141. பரமவைராக்யசாலி திம்மண்ண தாசரின் அங்கிதம்?
அ. ஶ்ரீபதி விட்டலா ஆ. ஶ்ரீகுருஶ்ரீஷ விட்டலா இ. ஶ்ரீரகுபதிவிட்டலா
ஈ. ஶ்ரீகேசவ விட்டலா

142. ஶ்ரீவிஜயீந்திர தீர்த்தரின் அங்கிதம்?
அ. ஶ்ரீவிஜயீந்திர ராமா ஆ. ஶ்ரீவிஜயீந்திர கிருஷ்ண இ. ஶ்ரீவிஜயீந்திர விட்டலா ஈ. ஶ்ரீவிஜயீந்திர வாஸுதேவ

143. ஹரிதாஸினி அம்பாபாய் அவர்களின் அங்கிதம்?
அ. கோபாலவிட்டலா ஆ. கோபாலகிருஷ்ண விட்டலா இ. வேணு கோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

144. மைசூர் எம்.ஆர்.கோவிந்த ராவ் அவர்களின் அங்கிதம்?
அ. குரு விட்டலா ஆ. கோவிந்த விட்டலா இ. குருகோவிந்த விட்டலா
ஈ. தந்தெ கோவிந்த விட்டலா

145. ஆகதாதி த்ரிகாலக்ஞும் … __ர்ய குரும் பஜே
அ. கோபால ஆ. பாகண்ணா இ. கனக ஈ. ஶ்ரீனிவாஸ

146. பல்லடம் மாதவாசார்யரின் அங்கிதம்?
அ. பத்மனாப விட்டலா ஆ. கோபாலகிருஷ்ண விட்டலா இ. வேணு கோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

147. பரமப்ரிய சுப்பராயதாசரின் மகன் வெங்கடராய தாசரின் அங்கிதம்?
அ. சுகபூர்ண விட்டலா ஆ. சகலசுகபூர்ண விட்டலா இ. வேணுகோபால விட்டலா ஈ. தந்தெகோபாலவிட்டலா

148. ஹசிக்யலு கோவிந்த தாசரின் அங்கிதம்?
அ. கேசவ விட்டலா ஆ. நாராயண விட்டலா இ. மாதவ விட்டலா
ஈ. கோவிந்த விட்டலா

149. சித்ரதுர்கா கிருஷ்ண ராவ் அவர்களின் அங்கிதம்?
அ. ரமாகாந்த விட்டலா ஆ. ராமகிருஷ்ண விட்டலா இ. ராமநாத விட்டலா ஈ. ராம நாயக விட்டலா

150. ஸ்ரீகுருகோவிந்தவிட்டலதாஸர் தம் வீட்டினை __ கோயிலாக மாற்றினார்.
அ. பாண்டுரங்கன் ஆ. ஸ்ரீனிவாஸன் இ. நரசிம்ம ஈ. ராம

151. சித்ரதுர்கா ஸ்ரீனிவாச ராவ் அவர்களின் அங்கிதம்?
அ. ரமாகாந்த விட்டலா ஆ. உரகாத்ரிவாஸ விட்டலா இ. ராமநாத விட்டலா ஈ. ராம நாயக விட்டலா

152. ஸ்ரீவித்யாபிரசன்ன தீர்த்தரின் அங்கிதம்?
அ. வித்யாபிரசன்ன விட்டலா ஆ. பிரசன்ன விட்டலா இ. பிரசன்ன வேங்கட விட்டலா ஈ. பிரசன்ன ராம விட்டலா

153. ஸ்ரீகோரேபாள ஹனுமந்த ராயரின் அங்கிதம்?
அ. கேசவ விட்டலா ஆ. நாராயண விட்டலா இ. சுந்தர விட்டலா
ஈ. கோவிந்த விட்டலா

154. ஸ்ரீனிவாஸ நாயகரின் கடைக்கு ஸ்ரீஹரி ஏன் வந்தார்?
அ. வைராக்கியம் கொடுக்க ஆ. பணம் கேட்க. இ. தாஸ தீட்சை அளிக்க
ஈ. மேற்கூறிய அனைத்தும்

155. வரதேந்திர ஹரிதாஸ ஸாகித்ய மண்டலியை துவக்கியது யார்?
அ. ஸுந்தர விட்டலா ஆ. குரு ஜகன்னாத விட்டலா இ. குருகோவிந்த விட்டலா ஈ. தந்தெகோவிந்த விட்டலா

156. கர்னாடக ஹரிதாஸ ஸாகித்ய என்னும் பத்திரிக்கையை துவக்கியது யார்?
அ. ஸுந்தர விட்டலா ஆ. குரு ஜகன்னாத விட்டலா இ. குருகோவிந்த விட்டலா ஈ. தந்தெகோவிந்த விட்டலா

157. (பலவிது பாள்துதக்கெ) ஜீவர்களின் பந்த மோட்சங்களுக்கு யார் காரணம்?
அ. வாயு ஆ. ரமாதேவி இ. ஸ்ரீஹரி ஈ. இவர்கள் அனைவரும்

158. கர்னாடக சங்கீத துவக்கப் பாடல்களின் பெயர் என்ன?
அ. பிள்ளரி கீதெ ஆ. லக்ஷ்ய கீதெ இ. லக்ஷண கீதெ ஈ. மேற்கூறிய அனைத்தும்

159. ஹரிதாச ஸாகித்யத்தின் இன்னொரு பெயர்?
அ. பக்தி ஸாகித்யம் ஆ. ஞான ஸாகித்யம் இ.வைராக்ய ஸாகித்யம்
ஈ. ஸித்தாந்த ஸாகித்யம்

160. குண்டோஜி தாஸர் - யார்?
அ. ஸ்ரீகுருஸ்ரீஷ விட்டலதாஸர் ஆ. ஸ்ரீ நரசிம்ம தாஸர் இ. இருவரும்
ஈ. யாரும் இல்லை

161. இவற்றில் எது சப்த (7) தாளத்திற்கு உட்பட்டது?
அ. கீர்த்தனை ஆ. உகாபோக இ. ஸுளாதி ஈ. மற்றவை

162. ஸ்ரீவைகுண்ட தாஸர் யாரிடமிருந்து தாஸ தீக்ஷை பெற்றார்?
அ. ஸ்ரீவ்யாஸராஜர் ஆ. ஸ்ரீஸ்ரீபாதராஜர் இ. ஸ்ரீவிஜயீந்திரர்
ஈ. ஸ்ரீவாதிராஜர்

163. அகில பாரத ஹரிதாஸ ஸம்மேளனத்தை உருவாக்கியவர் யார்?
அ. ஸ்ரீகுரு விட்டலா ஆ. ஸ்ரீகுரு ஜகன்னாத விட்டலா இ. ஸ்ரீகுரு கோவிந்த விட்டலா ஈ. ஸ்ரீதந்தெகோவிந்த விட்டலா

164. மொதலகல்லு ஸ்ரீசேஷதாஸர் யாருடைய அம்சமாக கருதப்படுகிறார்?
அ. ருத்ரர் ஆ. சேஷர் இ. கருடன் ஈ. அர்ஜுனன்

165. ஐந்து வயது வரை பேச்சு வராத ஹரிதாஸர் இவர்.
அ. ஸ்ரீஜகன்னாத தாஸர் ஆ. ஸ்ரீஷ்யாமஸுந்தர தாஸர்
இ. மொதலகல்லு சேஷதாஸர் ஈ. குருஸ்ரீஷ விட்டலர்

166. ஸ்ரீஷ்யாம ஸுந்தர தாஸர் யாரிடமிருந்து அங்கிதம் பெற்றார்?
அ. ஸ்ரீகுருஜகன்னாத தாஸர் ஆ. ஸ்ரீஅக்ஷ்பால் கோவிந்த ராவ்
இ. சுளாதி குப்பேராயரு ஈ. ஸ்ரீதந்தெ வெங்கடேச விட்டலா

167. ஸ்ரீவிஜயதாஸர் யாருடைய அம்சம் என்று கருதப்பட்டார்?
அ. ப்ருகு ஆ. நாரதர் இ. துர்வாஸர் ஈ. கணேஷ

168. ஸ்ரீவ்யாஸராஜருக்கு, ஸ்ரீகனகதாஸர், ஸ்ரீஹரியை ஒரு __ வடிவில் காட்டினார்.
அ. குழந்தை ஆ. கன்று இ. ஆள் ஈ. நாய்

169. மன்மனோ பீஷ்ட வரதம்... __ குரும் வந்தே...
அ. புரந்தர ஆ. விஜய இ. ஜகன்னாத ஈ. கோபால

170. நம: __ நமஸ்தே வ்யாஸ யோகினே...
அ. விஜய ஆ. ஸ்ரீபாத இ. ஜகன்னாத ஈ. கோபால

171. நம: ஸ்ரீபாதராஜாய நமஸ்தே… நம: __
அ. புரந்தர ஆ. விஜய இ. ஜகன்னாத ஈ. கோபால

172. யமாம்ஷாய பராபக்த்யா.. __ தே நம:
அ. புரந்தர ஆ. விஜய இ. கனக ஈ. கோபால

173. 17/18ம் நூற்றாண்டில் ஹரிதாஸர்களின் தலைமையிடம்?
அ. ஹம்பி ஆ. மந்திராலயம் இ. ராய்ச்சூர் ஈ. திருப்பதி

174. அஞ்ஞான திமிரச்சேதம்… __ குரும் பஜே
அ. புரந்தர ஆ. விஜய இ. கனக ஈ. கோபால

175. ஸ்ரீதவிட்டலர் யாரிடம் அங்கிதம் பெற்றார்?
அ. ஸ்ரீவிஜயதாஸர். ஆ. ஸ்ரீகோபாலதாஸர். இ. ஸ்ரீமோகனதாஸர்
ஈ. ஸ்ரீஜகன்னாத தாஸர்

176. ஸ்ரீ __ குரும் வந்தே ஸ்ரீனிவாசாங்க்ரி சத்ரதிம்
அ. புரந்தர ஆ. விஜய இ. கனக ஈ. ஸ்ரீனிவாஸ

177. பூபாலநாத பாதாப்ஜம் ... __ தாச மீடேஹம்
அ. கோபால ஆ. பாகண்ணா இ. கனக ஈ. ஸ்ரீனிவாஸ

178. இவர் வெளியேறினால், நாம் குருடன், செவிடன் என்று அழைக்கப்படுவோம்.
அ. கரணாபிமானி தேவதைகள் ஆ. தத்வாபிமானி தேவதைகள் இ. A&B ஈ. வாயு

179. ப்ராணபதி பதத்வந்த்வ… __ குரும் பஜே
அ. கோபால ஆ. விஜய இ. ப்ராணேஷ ஈ. ஸ்ரீனிவாஸ

180. ஸ்ரீஸ்ரீபாதராஜர் எந்த நோயினை போக்கினார்?
அ. குஹு யோக ஆ. பிரம்மஹத்யா தோஷ இ. நவகிரக தோஷ ஈ. அனைத்தும்

181. ஜகத்குரும் க்ருபாசிந்தும்… __ குரும் பஜே
அ. கோபால ஆ. குரு ப்ராணேஷ இ. ப்ராணேஷ ஈ. மஹிபதி

182. ஸ்ரீபிரஸன்னவெங்கட தாஸர் யாரிடமிருந்து அங்கிதம் பெற்றார்?
அ. குருவிடமிருந்து ஆ. தனக்குத்தானே இ. திருப்பதி வெங்கடாசலபதி ஈ. கனவில்

183. ஸ்வபக்த அனுக்ரஹார்த்தாய.. __ குரும் வந்தே..
அ. கோபால ஆ. குரு ப்ராணேஷ இ. ப்ராணேஷ ஈ. மஹிபதி

184. சரஸ்வதி பாய், முதியவருக்கு எதை தானமாகக் கொடுத்தார்?
அ. மூக்குத்தி. ஆ. தோடு. இ. வளையல். ஈ. கொலுசு

185. ஜலஜேஷ்ட நிபாகாரம்.. _ குரும் பஜே
அ. புரந்தர ஆ. விஜய இ. ஜகன்னாத ஈ. கோபால

186. தாஸகூடத்தை நிர்மாணித்தவர் யார்?
அ. ஸ்ரீதந்தெமுத்து மோகனதாஸர் ஆ. ஸ்ரீமுத்துமோகன தாஸர்
இ. ஸ்ரீமோகன தாஸர் ஈ. ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர்

187. யாருக்கு சேவை செய்ததால், ஸ்ரீஜகன்னாததாஸர் பிறந்தார்?
அ. திருப்பதி ஸ்ரீனிவாஸ ஆ. உடுப்பி கிருஷ்ண இ. மந்திரலாய ராயர் ஈ. பண்டரிபுர விட்டலன்

188. இவற்றில் எது பஞ்சாக்னியில் சேர்ந்தது இல்லை?
அ. மழை ஆ. புருஷ இ. ஸ்த்ரி ஈ. நெருப்பு

189. தாஸகூடம் இருக்கும் இடம்?
அ. பண்டரிபுரம் ஆ. தேவராயனதுர்கா இ. தொட்டபள்ளாபுர ஈ. மைஸூரு

190. ஸ்ரீகனகதாஸருக்கு உபதேசம் செய்த குரு யார்?
அ. ஸ்ரீஸ்ரீபாதராஜர் ஆ. ஸ்ரீவ்யாஸராஜர் இ. ஸ்ரீவாதிராஜர் ஈ. ஸ்ரீவிஜயீந்திரர்

191. ஸ்ரீவிஜயதாஸர் வழங்கிய முதல் அங்கிதம் யாருக்கு?
அ. ஸ்ரீவேணுகோபால விட்டலதாஸர் ஆ. ஸ்ரீமோகனதாஸர் இ. ஸ்ரீஹயவதன தாஸர் ஈ. ஸ்ரீகோபாலதாஸர்

192. ஸ்ரீதந்தெமுத்துமோகனதாசர் வழங்கிய முதல் அங்கிதம்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீஉரகாத்ரிவாஸ விட்டலதாஸர் இ. ஸ்ரீபாகேபள்ளி ஸேஷதாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

193. ஸ்ரீபாகேபள்ளி சேஷதாஸரின் முதல் அங்கிதம்?
அ. ஸ்ரீசேஷவிட்டலா ஆ. ஸ்ரீபாகேபள்ளி விட்டலா இ. ஸ்ரீப்ராணபதி விட்டலா ஈ. ஸ்ரீப்ராண விட்டலா

194. மொதலகல்லு ஸ்ரீசேஷதாஸரின் அங்கிதம் எது?
அ. தந்தெ விஜயவிட்டல ஆ. முத்து விஜயவிட்டல இ. குரு விஜய விட்டல. ஈ. ராமவிஜய விட்டல

195. ஸ்ரீமஹிபதி தாஸரின் சமகாலத்தவர்?
அ. ஸ்ரீபுரந்தரதாஸர் ஆ. ஸ்ரீவிஜயதாஸர் இ. ஸ்ரீபிரஸன்னவெங்கட தாசர் ஈ. ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர்

196. ஸ்ரீபாகேபள்ளி சேஷதாஸரின் இரண்டாம் அங்கிதம் (குருவிடமிருந்து வாங்கியது)?
அ. ஸ்ரீசேஷவிட்டலா ஆ. ஸ்ரீபாகேபள்ளி விட்டலா இ. ஸ்ரீப்ராணபதி விட்டலா ஈ. ஸ்ரீப்ராண விட்டலா

197. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸரிடம் அங்கிதம் வாங்கிய கடைசி ஹரிதாஸர் யார்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீஉரகாத்ரிவாஸ விட்டல தாஸர் இ. ஸ்ரீபாகேபள்ளி சேஷதாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

198. ஸ்ரீகுருகோவிந்த விட்டலதாஸர், கர்ப்பத்தில் இருந்தபோது, அவரது தாயாரை ஆசிர்வதித்தது யார்?
அ. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆ. ஸ்ரீஇபராமபுர அப்பாவரு இ. ஸ்ரீதந்தெ முத்து மோகனதாஸர் ஈ. ஸ்ரீவிஜயதாஸர்

199. பரமார்த்த சந்திரோதய - பத்திரிக்கையை துவக்கியது யார்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸர் இ. ஸ்ரீபாகேபள்ளி சேஷதாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

200. __ இல்லத தேஹ நிஷித்த என்று புரந்தரதாசர் கூறியது எதனை?
அ. நாம ஆ. மஹிமா இ. கர்மா ஈ. அங்கித

201. ஹரிதாச தீபிகா - மாதப் பத்திரிக்கையை துவக்கியவர் யார்?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸர் இ. ஸ்ரீதொட்டபள்ளாபுர தாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

202. இவர் நம்மிலிருந்து வெளியேறினால், ஸ்ரீஹரியும் வெளியேறுவார்.
அ. லட்சுமி ஆ. பிரம்மா இ. வாயு ஈ.ருத்ரர்

203. தாஸ தர்ம பிரவர்த்தக - பட்டம் யாருக்கு கொடுக்கப்பட்டது?
அ. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் ஆ. ஸ்ரீபரமப்ரிய சுப்பராய தாஸர் இ. ஸ்ரீதொட்டபள்ளாபுர தாஸர் ஈ. ஸ்ரீரமாகாந்த விட்டலதாஸர்

204. தாஸ இரட்டையர் எனப்படுபவர்கள் யார்?
அ. ஸ்ரீபுரந்தரதாஸர் & ஸ்ரீவைகுண்ட தாஸர் ஆ. ஸ்ரீகனகதாஸர் & ஸ்ரீவைகுண்ட தாஸர் இ. ஸ்ரீபுரந்தரதாஸர் & ஸ்ரீகனகதாஸர் ஈ. ஸ்ரீபுரந்தர தாஸர் & ஸ்ரீவிஜயதாஸர்

205. ஸக்ய பக்தி என்றால்?
அ. குரு சிஷ்ய ஆ. நட்பு இ. காதல் (அன்பு) ஈ தலைவன்-தாஸ்யன்

206. ஸ்ரீபுரந்தரதாசருக்கு அடுத்து, 150ஆண்டு இடைவெளிக்குப் பிறகு ஹரிதாச பரம்பரையை மீட்டெடுத்தவர் யார்?
அ. ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸர் ஆ. ஸ்ரீமஹிபதி தாஸர் இ. இருவரும் ஈ. இருவரும் இல்லை

207. வாக்யேயகாரர் எனப்படுபவர் யார்?
அ. பாட்டு எழுதுபவர் ஆ. எழுதிய பாடலுக்கு ராகம் அமைப்பவர்
இ. இருவரும் ஈ. இருவரும் இல்லை

208. ஹரிதாஸினி ஓர்வாய் லட்சுமி தேவம்மாவின் அங்கிதம்?
அ. குருகுஹா ஆ. நரசிம்ம விட்டலா இ. கூடலஸங்கமதேவா
ஈ. சென்ன மல்லிகார்ஜுன

209. 22 ஸ்லோகங்களைக் கொண்ட ஜகன்னாத தாஸ ஸ்தோத்திரத்தை இயற்றியவர்?
அ. ஸ்ரீகுருஜகன்னாத விட்டலதாஸர் ஆ. ஸ்ரீதவிட்டலா இ. ப்ராணேஷ விட்டலா ஈ. நரசிம்ம விட்டலா

210. ராயர் மடத்து எந்த ஸ்வாமிகளின் அருளை ஸ்ரீஜகன்னாத தாஸர் பெற்றிருந்தார்?
அ. ஸ்ரீவஸுதேந்திர தீர்த்தர் ஆ. ஸ்ரீவரதேந்திர தீர்த்தர். இ. இருவரும்
ஈ. இருவரும் இல்லை

211. பலவிது பாள்துதக்கெ - மற்றொரு பெயர்?
அ. அணுஹரிகதாம்ருதஸார ஆ. லகு ஹரிகதாம்ருதஸார இ. பல ஸ்துதி ஈ. மங்களாசரண

212. ஸ்ரீதந்தெமுத்துமோகனதாசர் எவ்வளவு பேருக்கு அங்கிதம் கொடுத்தார்?
அ. 550 ஆ. 1000 இ. 1165 ஈ. 1485

213. அ. ஸ்ரீஹரியை எப்போதும் புகழவேண்டும். ஆ. ஸ்ரீஹரி புகழும்படி வாழவேண்டும்
அ. அ மட்டும் ஆ. ஆ மட்டும் இ. அ&ஆ ஈ. இரண்டும் இல்லை

214. அனைத்து செயல்களையும் யாருக்கு சமர்ப்பிக்க வேண்டும்?
அ. இந்திரிய அபிமானிகளுக்கு ஆ. அபிமானி தேவதைகளில் இருக்கும் வாயு இ. வாயுவில் இருக்கும் ஸ்ரீஹரி. ஈ. இவர்கள் அனைவருக்கும்

215. ஸ்ரீகோபாலதாஸரின் புண்ய தினம்?
அ. கார்த்திக சுத்த அஷ்டமி ஆ. புஷ்ய அமாவாசை இ. ஜ்யேஷ்ட சுத்த அஷ்டமி ஈ. புஷ்ய பகுள அஷ்டமி

216. மத்வ நாமாவில் அனுமனைக் குறித்தான ஸ்லோகங்கள் எவ்வளவு?
அ. 7 ஆ. 4 இ. 8 ஈ. 10

217. இந்திராதி தேவதைகளுக்கு நற்பலன் / வரங்களைக் கொடுப்பவர் ஸ்ரீஹரியே.
அ. சரி ஆ. தவறு

218. ஸ்ரீவிஜயதாஸர் பிறந்த இடம்?
அ. சிப்பகிரி ஆ. சீகலபரவி இ. ஹம்பி. ஈ. மந்திராலயம்

219. மூக்குத்தி சம்பவத்தால் ஸ்ரீனிவாஸ நாயகர் என்ன மாற்றத்தைக் கண்டார்?
அ. வைராக்கியம் பெற்றார். ஆ. செல்வத்தை தானம் அளித்தார்.
இ. அர்த்தமுள்ள வாழ்க்கையை வேண்டினார். ஈ. மேற்கூறிய அனைத்தும்

220. எந்த தத்வத்தை நாம் எப்போதும் நினைக்க வேண்டும்?
அ. பஞ்சபேத ஆ. தாரதம்ய இ. ஜகத் ஸத்ய ஈ. இவை அனைத்தும்

221. ஸ்ரீஹரிக்கு எவையெல்லாம் சேதன ப்ரதிமைகள்?
அ. பிரம்மாதி அனைத்து ஜீவர்களும் ஆ. ஜடப் பொருட்கள்
இ. இரண்டும் ஈ. இரண்டும் இல்லை

222. (பலவிது பாள்துதக்கெ) பஞ்சருது என்று ஸ்ரீஜகன்னாததாஸர் எந்த இரு ருதுக்களை சேர்த்து சொல்கிறார்?
அ. வஸந்த & க்ரீஷ்ம ஆ. வர்ஷ & ஹேமந்த இ. ஹேமந்த & ஷரத்
ஈ. ஷரத் & ஷிஷிர

223. வஸந்தருதுவில் ஸ்ரீஹரியின் எந்த ரூபத்தை நினைக்க வேண்டும்?
அ. ஹீங்கார ஆ. ப்ரஸ்தாவ இ. உத்கீத ஈ. ப்ரதிஹார

224. ஸ்ரீகுருகோவிந்த விட்டல தாஸர் எவ்வளவு பேருக்கு அங்கிதம் வழங்கினார்?
அ. 200 ஆ. 260 இ. 360 ஈ. 460

225. இவற்றில் பஞ்சாக்னியில் சேர்ந்தது எது?
அ. மழை ஆ. நிலம் இ. ஆகாயம் ஈ. இவை அனைத்தும்

226. இவற்றில் பஞ்ச மனோவ்ருத்தியில் சேர்ந்தது எது?
அ. மனஸ் ஆ. புத்தி இ. சித்த ஈ. இவை அனைத்தும்

227. ஸ்ரீமுத்துமோகனதாஸருக்கு அங்கிதம் கொடுத்தவர்?
அ. ஸ்ரீநிதி விட்டலர் ஆ ஸ்ரீவர விட்டலர் இ. ஸ்ரீதந்தெமுத்து மோகன தாஸர் ஈ. ஸ்ரீபரமப்ரிய தாஸர்

228. இவற்றில் எது பஞ்ச மனோவ்ருத்தியில் சேர்ந்தது இல்லை?
அ. மனஸ் ஆ புத்தி இ. புருஷ ஈ. அஹங்கார

229. அ முதல் க்ஷ வரையிலான __ எழுத்துக்களுக்கு ஸ்ரீஹரியே அபிமானி
அ. 51 ஆ. 50 இ. 52 ஈ. 53

230. முண்டிகெ தாஸர் எனப்படுபவர் யார்?
அ. ஸ்ரீகனகதாஸர் ஆ. ஸ்ரீபுரந்தரதாஸர் இ. ஸ்ரீவைகுண்டதாஸர்
ஈ. ஸ்ரீவிஜயதாஸர்

231. மத்வ நாமா - இயற்றியவர் யார்?
அ. ஸ்ரீலட்சுமி நாராயணமுனி ஆ. ஸ்ரீஸ்ரீபாதராஜர் இ. அ&ஆ
ஈ. ஸ்ரீவ்யாஸ ராஜர்

232. ஹரிதாஸர்கள் ஸ்ரீஹரியை எந்த பாவத்தில் குறித்து பாடினர்?
அ. குரு சிஷ்ய ஆ. நட்பு இ. காதல் (அன்பு) ஈ. மேற்கூறிய அனைத்தும்

233. மத்வ நாமாவில் யாருடைய மகிமைகள் போற்றப்பட்டுள்ளன?
அ. வாயு ஆ. அனுமன் இ. மத்வர் ஈ. இவர்கள் அனைவரும்

234. தாஸ்ய பக்தி என்றால்?
அ. குரு சிஷ்ய ஆ. நட்பு இ. காதல் (அன்பு) ஈ தலைவன்-தாஸ்யன்

235. த்வாபரயுகத்தில் மோட்சத்திற்கு என்ன செய்யவேண்டும் என்று ஸ்ரீஸ்ரீபாதராஜர் கூறுகிறார்?
அ. தியானம் ஆ. யக்ஞம் இ. அர்ச்சனை ஈ. கீர்த்தனம்

236. மத்வ நாமாவில் மத்வரைக் குறித்தான ஸ்லோகங்கள் எவ்வளவு?
அ. 7 ஆ. 4 இ. 8 ஈ. 10

237. ஸ்ரீஸ்ரீபாதராஜரின் மூல ப்ருந்தாவனம் எங்கு உள்ளது?
அ. அப்பூர் ஆ. முளபாகிலு இ. பெனுகொண்டா ஈ. திருக்கோயிலூர்

238. ஹேமந்தருதுவில் ஸ்ரீஹரியின் எந்த ரூபத்தை நினைக்க வேண்டும்?
அ. ஹீங்கார ஆ. ப்ரஸ்தாவ இ. உத்கீத ஈ. ப்ரதிஹார

239. ஸ்ரீகுருகோவிந்தவிட்டலதாஸரின் புண்ய தினம்?
அ. மார்கஷிர பகுள துவாதசி ஆ. பாத்ரபத சுத்த சதுர்தசி இ. கார்த்திக பகுள சதுர்தசி ஈ. ஆஷாட சுத்த ஏகாதசி

240. ஸ்ரீலட்சுமி நாராயணமுனியின் புண்ய தினம் ?
அ. ஜ்யேஷ்ட சுத்த சதுர்தசி ஆ. ஜ்யேஷ்ட பகுள சதுர்தசி இ. ஜ்யேஷ்ட சுத்த சதுர்த்தி ஈ. ஜ்யேஷ்ட சுத்த சதுர்த்தி

241. எதில் வரும் சம்பவங்கள் மத்வ நாமாவில் சொல்லப்பட்டுள்ளன?
அ. ராமாயண ஆ. மகாபாரத இ. மத்வரின் வாழ்க்கை ஈ. இவை அனைத்தும்

242. ஸ்ரீதவிட்டலரின் புண்ய தினம்?
அ. கார்த்திக சுத்த தசமி ஆ. பாத்ரபத சுத்த சதுர்த்தி இ. கார்த்திக பகுள சதுர்த்தி ஈ. ஆஷாட சுத்த ஏகாதசி

243. ஜயஜய ஜகத்ராண ஜகதொளகெ ___
அ. ஸூத்ராண ஆ. ஸத்தாம இ. மத்வ நாமா ஈ. ஜகத்ராண

244. ஸ்ரீஹரி இப்படியும் அழைக்கப்படுகிறார்?
அ. அகிலகுண ஆ. நிகிலகுண இ.பூர்வகுண ஈ. அனைத்தும்

245. இவர் நம்முள் இருந்தால், ஸ்ரீஹரியும் இருப்பார்.
அ. லட்சுமி ஆ. பிரம்மா இ. வாயு ஈ.ருத்ரர்

246. இவற்றில் பஞ்ச மனோவ்ருத்தியில் சேர்ந்தது எது?
அ. மனஸ் ஆ. அஹங்கார இ. அந்த:கரண ஈ. இவை அனைத்தும்

247. தேவர்கள், தேவதைகள், மனிதர்கள் என அனைவரிலும் வியாபித்திருப்பவர் யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. இருவரும் இல்லை ஈ. A&B

248. ஸ்ரீஸ்ரீபாதராஜரின் வித்யா குரு?
அ. ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் ஆ. ஸ்ரீரகுநாத தீர்த்தர் இ. ஸ்ரீஸ்வர்ணவர்ண தீர்த்தர் ஈ. அ&ஆ

249. வேதங்களில் சொல்லியுள்ளபடி, மத்வா என்றால்?
அ. ஸ்ரீஹரி ஆ. ஸ்ரீமத்வாசார்யர் இ. வாயுதேவர் ஈ. பிரம்மன்

250. நம் உடலில் பிராணரூபி வாயு எங்குள்ளார்?
அ. கண், காது, மூக்குகளில் ஆ. கழிவு உறுப்புகள் இ. 72,000 நாடிகள்
ஈ. சுஷும்னா நாடி

251. ஷிஷிரருதுவில் ஸ்ரீஹரியின் எந்த ரூபத்தை நினைக்க வேண்டும்?
அ. ப்ரஸ்தாவ ஆ. உத்கீத இ. உத்கீத ஈ. ஹிங்கார

252. ஸ்ரீவிஜயதாஸர் எங்கு அங்கிதம் பெற்றார்?
அ. சிப்பகிரி ஆ. சீகலபரவி இ. காசி. ஈ. மந்திராலயம்

253. நம் உடலில் உதானரூபி வாயு எங்குள்ளார்?
அ. கண், காது, மூக்குகளில் ஆ. கழிவு உறுப்புகள் இ. 72,000 நாடிகள்
ஈ. சுஷும்னா நாடி

254. மத்வ நாமாவில் பீமனைக் குறித்தான ஸ்லோகங்கள் எவ்வளவு?
அ. 7 ஆ. 4 இ. 8 ஈ. 10

255. உலகில் வியானரூபி வாயு எங்குள்ளார்?
அ. சூரியன் ஆ. கழிவுகளை அகற்றும் பணியில் இ. காற்றில்
ஈ. உடலுக்கு வெளியே தேஜஸ்ஸில்

256. புதஜன என்றால்?
அ. அனைத்து மனிதர்கள் ஆ. கற்றறிந்தவர்கள் இ. தேவதைகள்
ஈ. அசுரர்கள்

257. மூக்குத்தி சம்பவத்திற்கு ஸ்ரீனிவாஸ நாயகர் யாருக்கு நன்றி கூறினார்?
அ. முதியவர் ஆ. ஸ்ரீஹரி. இ. மனைவி. ஈ. தனக்குத்தானே

258. இவற்றில் எது பஞ்சபூதங்களில் இல்லை?
அ. வாயு ஆ. கருடன் இ. பூமி ஈ. ஆகாயம்

259. அம்பிகா தனய யார்?
அ. வாயு ஆ. கருடன் இ. கணபதி ஈ. சேஷன்

260. ஸ்ரீஸ்ரீபாதராஜரின் ஆசிரம குரு?
அ. ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர் ஆ. ஸ்ரீரகுநாத தீர்த்தர் இ. ஸ்ரீஸ்வர்ணவர்ண தீர்த்தர் ஈ. அ&ஆ

261. கஜவக்த்ரன் என்றால்?
அ. தேவர்களால் வணங்கப்படுபவன் ஆ. யானைத் தலை கொண்டவன்
இ. பெரிய வயிறு கொண்டவன் ஈ. பாம்பை இடுப்பில் கட்டியவன்

262. ஆகாய தத்வத்தின் குணம்?
அ. கந்த ஆ. ரஸ இ. ருப ஈ. ஷப்த

263. சாஸ்திர வேதாந்த பாடங்களை ஸ்ரீஜகன்னாததாஸர் யாரிடம் பயின்றார்?
அ. ஸ்ரீநரசிம்ம விட்டல ஆ. ஸ்ரீ வரதேந்திரவிட்டல இ. ஸ்ரீவிஜயதாஸர்
ஈ. ஸ்ரீகோபாலதாஸர்

264. புஜக கடி ஸூத்ர என்றால்?
அ. தேவர்களால் வணங்கப்படுபவன் ஆ. யானைத் தலை கொண்டவன்
இ. பெரிய வயிறு கொண்டவன் ஈ. பாம்பை இடுப்பில் கட்டியவன்

265. ஸ்ரீமஹிபதி தாஸரின் அங்கிதம்?
அ. தீன மஹிபதி ஆ. தாஸ மஹிபதி ஆ. தரள மஹிபதி ஈ. மேற்கூறிய அனைத்தும்

266. கணபதியின் சகோதரன்?
அ. கருடன் ஆ. சேஷன் இ. ஷண்முகன் ஈ. ருத்ரர்

267. வித்தபதி யார்?
அ. கணபதி ஆ. ஷண்முகன் இ. கருடன் ஈ. குபேரன்

268. ஸ்ரீகோபாலதாஸர் பிறந்த இடம்?
அ. சிக்கலபரவி ஆ. சிப்பகிரி இ. மொஸரகல்லு ஈ. ஹம்பி

269. ககுப - என்றால் என்ன?
அ. திசை ஆ. ஆகாயம் இ. இரண்டும் ஈ. இரண்டும் இல்லை

270. கஜேந்திர யானைக்கு தரிசனம் அளித்த ஸ்ரீஹரி ரூபம் எது?
அ. நாராயண ஆ. மாதங்க வரத இ. ஸங்கர்ஷண ஈ. ப்ரத்யும்ன

271. ஸ்ரீஹரியை வணங்கியதால் கணபதிக்கு எந்த மோட்சம் கிடைத்தது?
அ. ஸாலோக்ய ஆ. ஸாரூப்ய இ. ஸாமீப்ய ஈ. ஸாயுஜ்ய

272. ஸங்க்யா - யாருடைய மனைவி?
அ. ஸூர்யா ஆ. சந்திரா இ. கணபதி ஈ. ஷண்முக

273. த்ரிகரணஜ தோஷம் என்றால்?
அ. சொற்களால் செய்த தோஷம் ஆ. உடலால் செய்த தோஷம்
இ. மனதால் செய்த தோஷம் ஈ. இவை அனைத்தும்

274. ரோகிணி யாருடைய மனைவி?
அ. ஸூர்யா ஆ. சந்திரா இ. கணபதி ஈ. ஷண்முக

275. சந்திரன் தற்போது வசிப்பது எங்கே?
அ. பாற்கடலில் ஆ. சிவனின் தலையில் இ. பிரம்ம லோகத்தில்
ஈ. வைகுண்டத்தில்

276. மாறன் யார்?
அ. சூரியன் ஆ. சந்திரன். இ. கணபதி ஈ. யமன்

277. சந்திரனில் யாருடைய ஆவேசம் உள்ளது?
அ. பிரம்மன் ஆ. ருத்ரர் இ. கணபதி ஈ. யமன்

278. வாரிஜ என்றால் என்ன?
அ. நீர் ஆ. வாயு இ. தாமரை ஈ. ஆகாயம்

279. ஸ்ரீபிரஸன்னவெங்கட தாஸர் யாருடைய அம்சமாக கருதப் படுகிறார்?
அ. நாரதர் ஆ. ருத்ரர் இ. இந்திரன் ஈ. பாண்டு

280. ஹ்ருத்திமிர - என்றால் என்ன?
அ. அஞ்ஞானம் ஆ. மோகம் இ. ஊழல் ஈ. இவை அனைத்தும்

281. அத்ரி முனிவரின் மனைவி யார்?
அ. கௌஸல்யா ஆ. அனுஸுயா இ. அருந்ததி ஈ. அகல்யா

282. வராகரூபி & பூதேவியின் வாரிசு யார்?
அ. குஜ ஆ. புத இ. ஸோம ஈ. சுக்ர

283. ஸ்ரீகுருஸ்ரீஷ விட்டலதாஸர் யாருடைய சிஷ்யர்?
அ. ஸ்ரீவிஜயதாஸர் ஆ. ஸ்ரீகோபாலதாஸர் இ. ஸ்ரீமோகனதாஸர்
ஈ. ஸ்ரீஜகன்னாத தாஸர்

284. அங்காரகன் வைத்திருக்கும் ஆயுதம் என்ன?
அ. சக்ர ஆ. கதா இ. கத்தி ஈ. எதுவுமில்லை

285. ஸ்ரீமஹிபதி தாஸரின் புண்ய தினம்?
அ. கார்த்திக சுத்த தசமி ஆ. கார்த்திக பகுள அமாவாசை இ. புஷ்ய பௌர்ணமி ஈ. புஷ்ய அமாவாசை

286. ஶ்ரீகனகதாஸர், குருவிடம் எந்த மந்திர உபதேசம் பெற்றார்?
அ. காயத்ரி ஆ. நாராயண இ. கோண ஈ. நரசிம்ம

287. நவக்கிரகங்களில் யார் சிறந்தவர்?
அ. சுக்ர ஆ. ராகு இ. சூரிய ஈ. குரு

288. சந்திர & தாராதேவியின் வாரிசு யார்?
அ. கேது ஆ. புத இ. சந்திர ஈ. சனி

289. தேவதைகளின் ராஜகுரு?
அ. ப்ருஹஸ்பதி ஆ. சுக்ர இ. புத ஈ. சூர்ய

290. ம்ருத ஸஞ்சீவினி மந்திர சித்தி பெற்றவர் யார்?
அ. ப்ருஹஸ்பதி ஆ. சுக்ராசார்ய இ. சந்திர ஈ. சூர்ய

291. ஷக்ர - யார்?
அ. சுக்ர ஆ. குரு இ. இந்திரன் ஈ. புதன்

292. கல்கி அவதாரம் எடுக்கப் போகும் கிராமம்?
அ. ஹம்பல ஆ. ஷம்பல இ. கம்பல ஈ. பூபால

293. நவக்கிரகங்களில் பார்கவ யார்?
அ. புத ஆ. குரு இ. மங்கள ஈ. சுக்ர

294. தரணி - யார்?
அ. சூரிய ஆ. சந்திர இ. குரு ஈ. சுக்ர

295. சனீஸ்வரன் என்றால் என்ன?
அ. மெதுவாக நகர்பவன் ஆ. பெரிய கிரகம் இ. கருப்பு கிரகம் ஈ. இவை அனைத்தும்

296. விவஸ்வான் மாயா - இவர்களின் வாரிசு யார்?
அ. சுக்ர ஆ. சனி இ. குரு ஈ. கேது

297. ஹரிபக்தர்களுக்கு நவகிரக தேவதைகள் துன்பம் கொடுப்பார்கள்?
அ. ஆம் ஆ. இல்லை

298. ஜலந்தரனின் மனைவி பெயர்?
அ. மாயா ஆ. தாரா இ. பிருந்தா ஈ. எதுவுமில்லை

299. அஹீந்திர - யார்?
அ. கருடன் ஆ. சேஷ இ. ருத்ர ஈ. சந்திர

300. ஸ்ரீவிஜயதாஸரின் முந்தைய அவதாரம்?
அ. மத்வபதி புரந்தர ஆ. ஸுரலீலா இ. ஒரு கன்று ஈ. மேற்கூறிய அனைத்தும்

301. அமரேந்திர - யார்?
அ. கருடன் ஆ. சேஷ இ. ருத்ர ஈ. சந்திர

302. ஸ்ரீபுரந்தரதாஸர் எந்த சித்தாந்தத்தை பின்பற்றினார்?
அ. த்வைத ஆ. அத்வைத. இ. விஸிஷ்டாத்வைத ஈ. எதுவுமில்லை

303. ஸுத்தோதனின் மகன் தன்னை எவ்வாறு அழைத்துக் கொண்டான்?
அ. கிருஷ்ணன் ஆ. புத்தன். இ. ராமன் ஈ. வாஸுதேவன்

304 க்ருத்தி வாஸன் - யார்?
அ. கருடன் ஆ. சேஷ இ. ருத்ர ஈ. சந்திர

305. நீல கந்தரன் - யார்?
அ. கருடன் ஆ. பிரம்ம இ. ருத்ரர் ஈ. வாயு

306. ம்ருகவர பாணி - யார்?
அ. கருடன் ஆ. பிரம்ம இ. ருத்ரர் ஈ. வாயு

307. ஷைலஜா ரமணன் - யார்?
அ. கருடன் ஆ. பிரம்ம இ. ருத்ரர் ஈ. வாயு

308. வ்ருஷ்டி வர்ய - யார்?
அ. கிருஷ்ண ஆ. பிரம்ம இ. ருத்ர ஈ. வாயு

309. இவர் வெளியேறினால், நாம் பிணம் என்று அழைக்கப்படுவோம்.
அ. கரணாபிமானி தேவதைகள் ஆ. தத்வாபிமானி தேவதைகள் இ. A&B
ஈ. வாயு

310. தப - யாருடைய அவதாரம்?
அ. ஸ்ரீஹரி ஆ. ருத்ர இ. வாயு ஈ. பிரம்ம

311. பிரம்மனின் தந்தை?
அ. வாயு ஆ. புருஷோத்தம இ. ருத்ர ஈ. எதுவுமில்லை

312. ஸுக - யாருடைய அவதாரம்?
அ. ஸ்ரீஹரி ஆ. ருத்ர இ. வாயு ஈ. பிரம்ம

313. உலகில் பிராணரூபி வாயு எங்குள்ளார்?
அ. சூரியன் ஆ. கழிவுகளை அகற்றும் பணியில் இ. காற்றில்
ஈ. உடலுக்கு வெளியே தேஜஸ்ஸில்

314. துர்வாஸர் - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

315. அஷ்வத்தாமன் - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

316. வாமதேவன் - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

317. அகோர - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

318. பார்கவ ராமனின் தாயார் யார்?
அ. அருந்ததி ஆ. ரேணுகா இ. அகலிகை ஈ. சீதா

319. ஸுகுணா என்றால் யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. ஸ்ரீலட்சுமிதேவி இ. பிரம்மா ஈ. ருத்ர

320. ஔர்வ - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

321. எந்த ஹரிதாஸருக்கு பிருந்தாவனம் உள்ளது?
அ. ஸ்ரீஜகன்னாததாஸர் ஆ. ஸ்ரீகோபாலதாஸர் இ. ஸ்ரீமஹிபதி தாஸர் ஈ. ஸ்ரீபிரஸன்னவெங்கட தாஸர்

322. ஸத்யோஜாத - யாருடைய அவதாரம்?
அ. ருத்ர ஆ. வாயு இ. ஸ்ரீஹரி ஈ. பிரம்ம

323. உக்ரதப - யார்?
அ. ருத்ர ஆ. ராவண இ. அனுமன் ஈ. சுக்ரீவ

324. பார்கவ ராமன் எவ்வளவு முறை உலகை சுற்றி வந்தார்?
அ. 8 ஆ. 108 இ. 21 ஈ. 1

325. ஆத்மநிவேதன பக்தி என்றால்?
அ. ஸ்ரீஹரியின் நற்குணங்களை கேட்டல் ஆ. ஸ்ரீஹரியின் நற் குணங்கள பேசுதல் இ. ஸ்ரீஹரியின் நற்குணங்களை எழுதுதல் ஈ. முழு சரணாகதி

326. கங்காதரன் - யார்?
அ. கருட ஆ. பிரம்ம இ. ருத்ர ஈ. வாயு

327. ஸ்ரீதவிட்டலரின் சொந்த ஊர்?
அ. கர்ஜிகி ஆ. தேவராயனதுர்கா இ. தொட்டபள்ளாபுர ஈ. ஸௌதி கிரமம்

328. வ்யோமகேஷ - யார்?
அ. கருட ஆ. பிரம்ம இ. ருத்ர ஈ. வாயு

329. ஸ்ரீவிஜயதாஸரின் புண்ய தினம்?
அ. கார்த்திக சுத்த தசமி ஆ. புஷ்ய அமாவாசை இ. பால்குண பகுள த்விதியை ஈ. பால்குண பகுள த்ருதியை

330. விரூபாக்ஷ - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

331. ஜீவர்களில் வாயுதேவர் செய்யும் மந்திரன் என்ன?
அ. நாராயண ஆ. ஹம்ஸ இ. கிருஷ்ண ஈ. ராம

332. ஜைகீஷவ்ய - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

333. ஊர்த்வரேத - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

334. ஸ்ரீவைகுண்ட தாஸரின் சொந்த ஊர்?
அ. ஹம்பி ஆ. பேலூர் இ. புரந்தரகட் ஈ. பண்டரிபுரம்

335. லம்பட - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

336. லோசனத்ரய - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

337. கேசரேஷ - யார்?
அ. ஸ்ரீஹரி ஆ. வாயு இ. பிரம்ம ஈ. ருத்ர

338. லட்சுமிதேவி எப்போது வடபத்ர ரூபம் தரித்தார்?
அ. ஸ்ருஷ்டி ஆ. ஸ்திதி. இ. லயம் ஈ. பிரளயம்

339. கேசரேஷனுக்குள் இருக்கும் ஸ்ரீஹரியின் ரூபம் எது?
அ. நாராயண ஆ. வாஸுதேவ இ. ஸுபர்ணா ஈ. ப்ராதேஷ

340. மாதங்க முக - யார்?
அ. கருட ஆ. கணபதி இ. ருத்ர ஈ. வாயு

341. 24 தத்வாபிமானி தேவதைகளையும் ஆளக்கூடியவர் யார்?
அ. கணபதி ஆ. வாயு இ. ருத்ர ஈ. இந்திர

342. கிரீடி - யார்?
அ. தர்மராஜ ஆ. பீம இ. நகுல ஈ. அர்ஜுன

343. எவ்வளவு லோகத்து ஜீவர்களில் வாயுதேவர் ஹம்ஸ மந்திரத்தை ஜெபிக்கிறார்?
அ. 14 ஆ. 3 இ. 1 ஈ. 7

344. நித்ய சம்சாரிகளுக்கு வாயுதேவர் என்ன கொடுக்கிறார்?
அ. நித்ய ஸுகதுக்க ஆ. முக்தி இ. தான தர்ம ஈ. துக்க

345. கஜுகணாதிப - யார்?
அ. வாயு ஆ. பிரம்ம இ. இருவரும் ஈ. இருவரும் இல்லை

346. கலி போன்ற தைத்யர்களை ஆளக்கூடியவர் யார்?
அ. வாயு ஆ. கணபதி இ. இந்திர ஈ. ருத்ர

347. அடுத்த கல்பத்தில் வாயுதேவரின் பதவி என்ன?
அ. வாயு ஆ. லாதவ்ய இ. பிரம்மா ஈ. கல்கி

348. லம்போதர லகுமிகர, கெரெய நீரனு - இவை என்ன வகைப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன?
அ. பிள்ளரி கீதெ ஆ. லக்ஷ்ய கீதெ இ. லக்ஷ்ண கீதெ ஈ. மேற்கூறிய அனைத்தும்

349. 1மணி நேரத்தில் வாயுதேவர் எவ்வளவு ஹம்ஸ மந்திரங்களை செய்கிறார்?
அ. 21600 ஆ. 900 இ. 108 ஈ. 450

350. பலதேவ - யார்?
அ. வாயு ஆ. கணபதி இ. இந்திர ஈ. ருத்ர

351. காலகூட விஷயத்தைப் பருகியவர் யார்?
அ. வாயு ஆ. கணபதி இ. இந்திர ஈ. பிரம்மா

352. கத்யோத நந்தன - யார்?
அ. அனும ஆ. விபீஷண இ. கும்பகர்ண ஈ. சுக்ரீவ

353. பல்குணன் - யார்?
அ. தர்மராஜ ஆ. பீம இ. நகுல ஈ. அர்ஜுன

354. இவற்றுள் எது அத்வைத வாத தத்வம்?
அ. ஜீவபிரம்ம ஐக்ய ஆ. ஜகத் மித்யா இ. சிவ சர்வோத்தம ஈ. இவை அனைத்தும்

355. பிரம்மதேவரின் இடம்?
அ. அனந்தாஸன ஆ. வைகுண்ட இ. ஸத்யலோக ஈ. பூலோக

356. நெய்யில் இருக்கும் ஸ்ரீஹரியின் ரூபங்கள் எவ்வளவு?
அ. 20 ஆ. 21 இ. 22 ஈ. 23

357. சாரத வனிதெ - யார்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

358. ஜகன்னாதவிட்டலனின் தரிசனத்தைப் பெற யாரை வணங்க வேண்டும்?
அ. மாதரிஷ்வ ஆ. பிரம்ம இ. ருத்ர ஈ. இந்திர

359. 3 குணங்களின் நியாமகர் யார்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

360. மத்தெபேந்திர கமனே - யார்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

361. ஸ்ரீகிருஷ்ணன் யாதவ குலத்தில் பிராக்ருத தேகத்தில் பிறந்தார்
அ. சரி ஆ. தவறு

362. நிர்ஜரசித்த கீதெ - யார்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

363. தேவதைகளும் முக்தஜீவர்களும் யாரை வணங்குகின்றனர்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

364. பிரளயத்தின்போது வடபத்ர ரூபம் தரித்தவர் யார்?
அ. சரஸ்வதி ஆ. பாரதி இ. லட்சுமி ஈ. யாருமில்லை

365. கல்கி அவதாரத்தின் தந்தை யார்?
அ. விஷ்ணு யஷஸ் ஆ. ராம யஷஸ் இ. வாஸுதேவ ஈ. நாராயண

366. தைத்ய தாரதம்யத்தில் முதலாவதாக இருப்பவர் யார்?
அ. விப்ரசித்த ஆ. கம்ஸன் இ. ராவணன் ஈ. கலி

367. ஸுத்தோதனின் மனைவியின் பெயர்?
